தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சட்ட மன்ற மேலவையின் ஐம்பத்தி ஒன்றாவது கூட்டத் தொடர்.

வியாழக்கிழமை, 1975 நவம்பர் 6.

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Transport facilities to Police Stations.

*71. Q.—THIRU A. BALASUBRAMANIAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that necessary transport facilities are not available in every Police Station for the effective implementation of prohibition; and

(b) if so, whether there is any proposal with the Government to provide transport facilities?

காவல் நிலையங்களுக்கு வாகன வசதிகள்.

திரு. அ. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மதுவிலக்கை அமுல் செய்வதைத் துரிதப்படுத்த ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் வாகன வசதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆமெனில், வாகன வசதி ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) மதுவிலக்கைச் செயல் படுத்துவதற்காகவென்றே காவல் நிலையம் ஒவ்வொன்றுக்கும் வண்டி ஒன்றை வழங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மது விலக்கைச் செயல்படுத்தும் காவல் துறை சூப்பிரண்டுகளிடம் இதற்காகப் போதிய அளவு வண்டிகள் உள்ளன.

[1975 நவம்பர் 6

திரு. அ. பாலசுப்பிரமணியம்: துணைத் தலைவரவர்களே, ஒரு தாலுக்காவிலே என்று எடுத்துக்கொண்டாலும்கூட, போதுமான அளவுக்கு வசதி இல்லாத காரணத்தினால், இது தவிர வேறு குற்றங்கள் ஏதாவது நிகழ்ந்தால், காவல் துறையினர் துரிதமாகச் செல்வதற்கு கஷ்டம் ஏற்படுகிறது என்பதாகத் தெரிகிறது. ஆகவே அரசு மேலும் இந்தத் திட்டத்தை அமுல்படுத்த ஏதாவது செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உறுப்பினர் அவர்கள் இது வன்னியில் பொதுவாகவே காவல் துறையினருக்கு அதிகமான வண்டிகள் வேண்டும் என்று கோரினார்கள். மாவட்டத்தில் மொத்தம் 283 சர்க்கிள்கள் இருக்கின்றன. இப்போது ஏறத்தாழ 200 சர்க்கிள்களுக்கு ஜீப்புகளும், பிக்-அப் வேன்களும் இருக்கின்றன. மற்றவைகளுக்கு வழங்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

திரு. எல். பலராமன்: மதுக் குற்றம் அதிகமாகி தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று கருதப்படுவதால், அரசு மாவட்ட வாரியாக தனியாக காவல் துறை பிரிவு ஏற்படுத்துவதற்கு ஏற்படுத்த இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, டி.ஐ.ஜி. அளவிலே இந்த மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு ஓர் இலாகா இயங்கிவருகிறது. சென்னையிலே அதற்குத் தலைமை அலுவலகம் இருக்கிறது. டி.ஐ.ஜி. அவர்கள் தலைமையில் அது இருக்கின்றது. ஒவ்வொரு மாவட்ட அளவிலும் மொபைல் யூனிட் வேறு இயங்கி வருகின்றது. டெபுடி சூப்பிரண்டெண்டன்ட் அவர்கள் தலைமை ஏற்று அந்தப் பணியை நடத்தி வருகிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: நம் மாநிலம் மதுவிலக்குத் திட்டத்தைக் கையாண்டதன் காரணமாக, இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த இழப்பை ஈடு செய்ய அல்லது ஒரு பகுதியையாவது ஈடு செய்ய மத்திய அரசுக்கு மாநில அரசு கடிதம் எழுதியதா? அதற்கு என்ன பதில் வந்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பல முறைகள் மாநில அரசு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. மது விலக்கினால் ஏற்படுகிற இழப்பை ஈடு செய்யும் அளவுக்கு இல்லாவிட்டாலும், ஒரு கணிசமான அளவுக்கு, ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்திற்காவது ஈடு செய்ய வேண்டுமென்று கேட்கப் பட்டிருக்கிறது. ஆனால், மத்திய அரசு அதைப்பற்றி ஆலோசிப்பதாகச்

[1975 நவம்பர் 6]

சொன்னது. அதை 12 அம்சத் திட்டத்தோடு 13-வது அம்சமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றுகூட அண்மையிலே பிரதமரிடத்திலே எடுத்துச் சொல்லப்பட்டது. மீண்டும் நினைவுறுத்தியும் இருக்கிறோம். டெல்லியிலே கூடிய அமைச்சரவையில், இதனால் பயனடைபவர்கள் குஜராத்தும், தமிழ் நாடுமாக இருப்பதால், அதைக் கைவிட்டுவிட்டதாகத் தெரிகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : மற்ற மாநிலங்கள் ஏதேனும் மது விலக்கைக் கொண்டுவருமானால், அவர்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை கொடுப்பார்களா? அப்படியானால், மறுபடியும் மது விலக்கை ரத்து செய்துவிட்டு, மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மற்ற மாநிலங்களைப் பொறுத்த வரையில், கடந்த 2, 3 ஆண்டுகளாக கருநாடக முதலமைச்சர் அவர்களைத் தொடர்ந்து பீகார் மாநில முதலமைச்சர் அவர்களும் மது விலக்குத் திட்டத்தை அமுல் படுத்தினால் 30 கோடி அல்லது 40 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்படும் என்றும், அதை ஈடு கட்ட மத்திய அரசு தயாராக இருந்தால், அதைப் பற்றி யோசிக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அவர்களால் அப்படிச் சொல்ல முடிகிறது. நம்மால் அப்படிச் சொல்ல முடியவில்லை.

திரு. கே. ராஜாராம் : மது விலக்குத் திட்டத்தை மாநிலம் பூராவும் அமுல் படுத்தியிருக்கின்ற மாநிலங்கள் குஜராத்தும் தமிழ் நாடும்தான். அவைகளில் மாற்றுக் கட்சியினர் ஆட்சி நடைபெறுவதனால், மாநில அரசுக்கு மத்திய அரசிலிருந்து இழப்பீட்டுத் தொகை இல்லை என்ற அளவுக்கு கைவிட்டு விட்டதாக அதிகார பூர்வமாகத் தகவல் வந்திருக்கிறதா? யாரோ சொல்லிவிட்டார்கள் என்று நாம் விட்டுவிடக்கூடாது. மேற்கொண்டு முயற்சி செய்ய நமது அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எதிர்க் கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களுக்குத் தர இயலாதென்று அதிகார பூர்வமாக எழுத மாட்டார்கள். நாம் தான் ஜாடையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

Prohibition Cases.

* 72. *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of persons who have been sentenced to imprisonment or imposed fine respectively, in connection with prohibition offences from the reintroduction of prohibition; and